**ஏப்ரல் – 28**

**"உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது." - ரோம 5 : 3 - 5.**

நமக்குப் பொறுமை தேவையாயிருக்கிறது. அதை சோதனைகளினால் மாத்திரமே சம்பாதிக்க முடியும். நமக்கு விசுவாசம் அவசியமாயிருக்கிறது. அதைத் தேவைகளினால் மாத்திரமே அபிவிருத்தி செய்ய முடியும். நமது வருங்கால வேலைக்காக நமக்கு அநுபவம் தேவையாயிருக்கிறது. அதை நம்மை சுற்றிலுமுள்ளவர்களின் பலவீனங்களைக் குறித்தும், கஷ்டங்களைக் குறித்தும், சோதனைகளைக் குறித்தும் பரிதபிக்கப்பட்ட நம்மை, அனுமதிக்கிற அப்படிப்பட்ட அனுபவங்களினால் மாத்திரமே நாம் ஆதாயப்படுத்தக் கூடும். நாம் தேவனுடைய இராஜ்யத்தில் இவர்களுக்குத்தான் ஊழியக்காரர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இருப்போம். அப்படியானால், நமக்கு நிகழுகிற அனுபவங்களின் படிப்பினை என்னவென்றால், தீமைக்கு எதிர்த்து நிற்க வேண்டுமென்பதே. ஆனால் தீமையை தீமையினாலல்ல, ஆனால் நன்மையினால்.

**-Z ’03, 348 (R 3228).**

உபத்திரவங்கள் தங்களிலே மேன்மை பாராட்டப்படுவதற்கல்ல, ஆனால் அவைகள் நம்மில் பொறுமையை உண்டாக்கும் போது, அவைகளில் நாம் மேன்மை பாராட்டலாம். நன்மை செய்கிறதிலிருக்கும் அப்படிப்பட்ட விடாமுயற்சி தேவனுடைய அங்கீகாரத்தினாலே பலனளிக்கப்படுகிறது. இது உணர்ந்து கொள்ளப்படும் போது, முடிவான வெற்றிக்காக இருதயத்தை நம்பிக்கையால் நிரப்புகிறது. இந்த நம்பிக்கை வீணானதுமல்ல, ஏனென்றால், யாருடைய இருதயம் யேசு கிறிஸ்துவினால் தேவனால் நமக்குக் கொடுக்கப்படுகின்ற பரிசுத்த ஆவியின் சிரேஷ்டமான கனியான தெய்வீக அன்பினால் நிரப்பப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்கு இந்த ஜெயத்தைக் கொடுப்பதில் தேவன் சந்தோஷப்படுகிறார். **-P ’27, 55.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

மத் 5:11; 1பேது 3:12-14; 2கொரி 4:16-18; 7:4; எபி 12:5-13; யாக் 1:2-4,12; பிலி 1:20; 2தீமோ 1:12; 2கொரி 1:22; கலா 4:6; எபே 1:13,14.

**கோபுர வாசிப்பு : Z ’14, 291 (R 5544).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் படியான இவ்வார அனுபவங்கள் எவை? நான் அவற்றை எவ்வாறு ஏற்றுக் கொண்டேன்? அவை எனக்குச் செய்தது என்ன?